## 16. மகிமையின் மன்னவனே மாசற்ற

பல்லவி

மகிமையின் மன்னவனே மாசற்ற தேவனே
என் பாவ தோஷத்தை
மன்னித்து மறந்தீரே
உம் அன்பை பாடுவேன்

சரணங்கள்

1. நாற்றத்தின் சேற்றிலிருந்து தூக்கினீரே
உம் திரு இரத்தத்தால் கழுவினீரே
கிழக்கிற்கும் மேற்க்கிற்கும் எத்தனை தூரமோ
அத்தனை தூரமாய் என் பாவம் நீக்கினீர்
- மகிமையின்

2. இஸ்ரவேலின்தேவனே என்னை காக்கின்றவர் நீர்
என்றும் உறங்காதவரே உம்மைபாடுவேன்
பகலுக்கு மேகமாய் இரவுக்கு அக்கினியாய்
என்னை மூடி காத்தீரே சேனைகளின் தேவனே
- மகிமையின்

3. தண்ணீரை கடக்கும்போது என்னோடிருப்பீர்
ஆறுகளை கடக்கும் போது என்னோடிருப்பீர்
தண்ணீரும் புரளாதே அக்கினியும் பற்றாதே
உம் கரம் என்னோடு சூழ்ந்து என்றும் தாங்குவீர்
- மகிமையின்